ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2183/21 - 2020 ජූලි මස 07 වැනි අඟහරුවාදා - 2020.07.07
*2183/21 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

(முத்திரை)

கோட்டாபய ராஜபக்ஷ

### சனாதிபதியின் பணிப்புரை

1. தொல்பொருள் சக்கரவர்த்தி வணக்கத்துக்குரிய எல்லாவல மேதானந்த நாயக்க தேரர் அவர்கள்

2. வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய இரு மாகாணங்களின் மற்றும் தமன்கடுவ பிரதேசத்தின் பிரதம சங்கநாயக்க அரிசிமலே ஆரணியத்தின் சேனாசனாதிபதி வணக்கத்துக்குரிய பனாமுரே திலகவங்ச நாயக்க தேரர் அவர்கள்

3. மேஜர் ஜெனரால் (ஓய்வுபெற்ற) கமல் குணரத்ன அவர்கள்
   செயலாளர், பாதுகாப்பு அமைச்சு

4. கலாநிதி செனரத் பண்டார திசாநாயக்க அவர்கள்
   தொல்பொருள் பணிப்பாளர் நாயகம்

5. திருமதி சந்திரா ஹேரத்
   காணிப் பணிப்பாளர் நாயகம்

6. திருமதி ஏ. எல். எஸ். சி. பெரேரா
   நில அளவையாளர் நாயகம், நிலஅளவையாளர் திணைக்களம்

1A - G 32269 — 32 (2020/07)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

7. பேராசிரியர் ராஜ் குமார் சோமதேவ அவர்கள்
சிரேட்ட விரிவுரையாளர், களனிப் பல்கலைக்கழகம்

8. பேராசிரியர் கபில குணவர்த்தன அவர்கள்
பேராதனை பல்கலைக்கழகம் வைத்திய பீடம்

9. தேசபந்து தென்னக்கோன் அவர்கள்
சிரேட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், கிழக்கு மாகாணம்

10. எச்.ஈ.எம்.டப்ளிவ்.ஜி.திசாநாயக்க அவர்கள்
மாகாண காணி ஆணையாளர், கிழக்கு மாகாணம்

11. திலித் ஜயவீர அவர்கள்
தலைவர், தெரண ஊடக வலையமைப்பு

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள் !

இலங்கை அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, 2020.06.01 ஆந் திகதிய சனாதிபதியின் பணிப்புரையின் மூலம் தாபிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தினுள் தொல்பொருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற்கான சனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாக தாங்கள் நியமிக்கப்பட்டுள்ளதாதலாலும்,

அச்செயலணியின் விடயப் பொறுப்பு மற்றும் கடமைப் பொறுப்பு தொடர்பாக கவனத்திற்கொள்ளும் போது மேற்போந்த உறுப்பினர்களுக்கு மேலதிகமாக சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பிரதிநிதித்துவத்திற்கான தேவை இனங் காணப்பட்டுள்ளதாதலாலும்,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி பதவியை வகிக்கும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், இலங்கை அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ரியர் அத்மிரால் ஆனந்த பீரிஸ் அவர்களின் விவேகம், திறமை மற்றும் பற்றுறுதி என்பவற்றின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்து மேற்குறிப்பிட்ட சனாதிபதியின் பணிப்பாணை மூலம் தாபிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தினுள் தொல்பொருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற்கான சனாதிபதி செயலணியின் உறுப்பினரொருவராக இத்தால் நியமிக்கின்றேன்.

இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதியாகிய இன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகிரங்க இலச்சினையின் கீழ் கொழும்பில் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.